முருகப்பெருமான் துணை

**மகான் மூர்க்க நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.08.2022, வெள்ளிக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்க ஞானியே
ஞானயுகம் படைக்க வந்தநல்
ஞானதேசிகனே உன்பெருமை கூறி
ஞாலமதில் சுபகிருது யாளி திங்கள்
2. திங்களிலே சூல திகதி புகரோன் வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 03 நாள், 19.08.2022 வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு மூர்க்க நாயனாரும்
இங்கனமே அருளாசி தன்னை
இயம்பிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் சன்மார்க்கம் எனும்
ஞானவாழிகளை மக்கள் ஏற்று
வலம்வர பிரணவக்குடில் நோக்கி
வருமுலகில் மக்களிடை குருவருள்
4. குருவருள் பெருந்துணை ஆகியே
குடி காக்கும் வருபவர் குலம் காக்கும்
திருவருள் பெறும் வழிதனையும்
தேசிகன் வழிகாட்டல் உறுதி செய்யும்
5. செய்யவே தீவினை மது மாது
செய்வினையாக புகை அடிமையான
அய்யமிலா தீவழி தொடருகின்ற
ஆண்பெண்கட்கும் தெளிவுதிடம்
6. திடமுற தீவினை விட்டு அகல
தேசிகனார் ஆசி தீட்சை பெற
சடுதி அகன்று பூரணத்தெளிவு
சகல வகையும் தேறி குணம் அடைவர்
7. அடையவே ஆபத்துக் கலகம்
ஆயுத கண்டம் பகைபலன்
சோடை ஏதும் அனுகாதபடி
சுத்தநெறியோடு அரங்கன் வழிக்கு வர
8. வருகவே பெரும் பாதுகாப்பு
வறுமை துன்பம் போட்டியென
சிறுமையான தாக்கம் எதுவும்
சேர்ந்திடா காப்பதுவும் பெருகி
9. பெருகியே அரங்கமகான் ஆசி
பெருமைபட கொண்டவரெல்லாம்
தரும வழிக்கும் வந்துமே
தன்னார்வ தொண்டு பெருக்கி

10. பெருக்கியே படிப்படியாக சடுதி
பெருமை மிக்க ஞானவான்களாக
கருத்தாக வினைகளை போக்கி
கலியினில் தருமவான்களாக அடையாளம் கூடி

11. கூடியே அரங்க ஞானியால்
குருவருளால் தேர்வு கண்டுமே
ஈடேறுவர் ஞானிகளாகவே
இனிபிறவா கதியும் பெறுவர்
அருளாசி முற்றே

–சுபம்–